செ.வெ.எண்: 19 நாள்: 10.02.2018

# புதுக்கோட்டையில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த தொழிலாளர்துறை அலுவலக கட்டட கட்டுமான பணிகளை முதன்மை செயலர் மற்றும் தொழிலாளர் ஆணையர் திரு.கா.பாலச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை பாலன்நகரில் பொதுப்பணித்துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த தொழிலாளர்துறை அலுவலக கட்டட கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், முதன்மை செயலர் மற்றும் தொழிலாளர் ஆணையர் திரு.கா.பாலச்சந்திரன்.இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.02.2018) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதிதாக கட்டப்படும் ஒருங்கிணைந்த தொழிலாளர்துறை அலுவலக கட்டடம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல்தளம் ஆகிய இரண்டு தளங்களை கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதன் தரைத்தளம் மற்றும் முதல்தளம் ஒவ்வொன்றும் தலா 500 சதுரமீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதன் தரைத்தளத்தில் காத்திருப்போர் அறை, எடையளவு முத்திரை அறை, சோதனை எடையளவு ஆய்வக அறை, தொழிலாளர் உதவி ஆய்வாளர் அறை, துணை ஆய்வாளர் அறை, பறிமுதல் பொருட்கள் இருப்பு அறை மற்றும் காப்பாளர் அறை, ஆண், பெண் தனித்தனி கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இதன் முதல்தளத்தில் நான்கு அலுவலக அறைகள், அலுவலக பணியாளர்கள் அறைகள், கணினி அறை, ஓய்வு அறை, ஆண், பெண் தனித்தனி கழிப்பறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் முதன்மை செயலர் மற்றும் தொழிலாளர் ஆணையர் அவர்கள் ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலக கட்டடத்தில் கட்டப்பட்டுள்ள அனைத்து அறைகளையும் பார்வையிட்டு அதன் உறுதித்தன்மை குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்தார். மின்சார வசதி, குடிநீர் வசதி போன்ற பல்வேறு வசதிகள் குறித்து கேட்டறிந்ததுடன் நிலுவையில் உள்ள வர்ணப்பூச்சு, மின்சாதனப் பொருட்கள் பொருத்துதல் மற்றும் பிற பணிகளை விரைவில் முடிப்பதுடன் அலுவலகத்திற்கு சுத்தமான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு முதன்மை செயலர் மற்றும் தொழிலாளர் ஆணையர் திரு.கா.பாலச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் உத்திரவிட்டார்.

இந்த ஆய்வின்போது புதுக்கோட்டை சார் ஆட்சியர் செல்வி.கெ.எம்.சரயு இ.ஆ.ப., கூடுதல் தொழிலாளர் ஆணையர் (திருச்சி) திரு.ராதாகிருஷ்ண பாண்டியன், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் திரு.ரமேஷ், வட்டாட்சியர் திரு.தமிழ்மணி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**